II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 435 of 2018**

Deposition of witness for the Plaintiff/PW 1
Respondent solemnly byThiru. S.Ramanujam, Translator
in accordance with the provision of Act I for 1873 on 05.12.2024

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : P.Sivaprakasam | | Caste | : |
| Father's / Husband's Name | : | | Calling | : |
| Age | : | | Religion | : |
| Village | : | | Taluk | : |

முதல் விசாரணை=

நான் வழக்கின் வாதி. என்னுடைய பிரமாணப் பத்திரத்தினை இன்று தாக்கல் செய்கின்றேன். அதனை எனது முதல் விசாரணைச் சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அதில் உள்ள விவரங்கள் உண்மையானவை. பிரமாணப்பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆணவங்களாக கீழே கண்ட ஆவணங்களை குறியீடு செய்யுமாறு வேண்டுகின்றேன்.

1. 31.08.1988 தேதியிட்ட அஞ்சம்மாள் மற்றும் வி.ராஜி ஆகியவர்கள் கே.ராமகிருஷ்ணன் அவர்களுக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.1.

2. அசல் வழக்கு எண். 337/2004 வழக்கில் பிறப்பித்த தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.2.

3 மேல்முறையீட்டு எண். 21/2010 வழக்கில் பிறப்பித்த தீர்ப்பின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.3.

4. மேல்முறையீட்டு எண். 21/2010 வழக்கில் பிறப்பித்த தீர்பாணையின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.4

5. இரண்டாவது மேல் முறையீட்டு எண். 1632/2011 வழக்கில் தீர்ப்பின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.5.

6. 14.07.2015 தேதியிட்ட கே.ராமகிருஷ்ணன் அவர்கள் 1, 2 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.6.

7. 14.10.2016 தேதியிட்ட 1, 2 பிரதிவாதிகள் 6, 7 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட கிரயபத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.7.

8. 14.03.2017 தேதியிட்ட பிரதிவாதிகள் 1, 3 முதல் 5, 2வது பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத் விடுதலை பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.8.

9. 01.07.2015 தேதியிட்ட வாதி மற்றும் அவரது மகள், எனது பெயருக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.9.

10. அசல் வழக்கு எண். 349/2015 வழக்கின் பிராது நகல் வா.த.சா.ஆ.10.

எனவே பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுகின்றேன்.

(அறிவார்ந்த வாதித் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆவணங்களை குறியீடு செய்ய சாட்சி விசாரணை முதல் விசாரணை தொடர்ச்சி என்று ஒத்திவைக்கப்படுகின்றது)